04-01-2017

தினமணி

# கத்தரிக்காய் விலை உயர்வு; கிழங்குகள் வரத்து அதிகரிப்பு



திருநெல்வேலி மாவட்டத்தில் கத்தரிக்காய், பாகற்காய் உள்ளிட்டவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் வறட்சி நிலவி வருகிறது. தோட்டங்கள் உள்ளவர்களும் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். மேலும், பனிப்பொழிவு அதிகமாக உள்ளதால் சில காய்கனிகள் திரட்சியடையாமல் உதிர்ந்து விழுகின்றன. தை முதல் நாளில் காய்கனிகளின் தேவை மேலும் அதிகரிக்கும் என்பதால் விவசாயிகள் பலரும் காய்கனி அறுவடையை இரு வாரங்களுக்கு தள்ளிவைக்க நினைப்பதால் வரத்து மிகவும் குறைந்துள்ளது.

அதனால் கடந்த சில நாள்களுக்கு முன்பு கிலோ ரூ.20-க்கு விற்பனையான கத்தரிக்காய் இப்போது இரட்டிப்பாகி உள்ளது. இதேபோல பாகற்காய் உள்ளிட்டவையும் விலை உயர்ந்துள்ளன. கிழங்குகள் வரத்து சந்தைகளுக்கு அதிகரித்துள்ளது.

திருநெல்வேலியில் உள்ள சந்தையில் காய்கனிகளின் விலை நிலவரம் (ஒரு

கிலோவுக்கு): கத்தரி-ரூ.44, வெண்டைக்காய்-16, தக்காளி-14, அவரைக்காய்-28, புடலங்காய்-12, பாகற்காய்-28, பீர்க்கங்காய்-16, சுரைக்காய்-8, தடியங்காய்-12, பூசணிக்காய்-12, மாங்காய்-30, மிளகாய்-30, முள்ளங்கி-14, கொத்தவரை-32, சேனைக்கிழங்கு-26, கருணைக்கிழங்கு-28, இஞ்சி-40, உருளைக்கிழங்கு-22, கேரட்-18, பீட்ரூட்-12, முட்டைகோஸ்-10, சவ்சவ்-12, ரிங்பீன்ஸ்-16, காலிபிளவர்-30, பூண்டு-60, சின்னவெங்காயம்-.25, பல்லாரி-12, கொய்யாப்பழம்-40, பப்பாளி-ரூ.30.

தினகரன்

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மக்காச்சோளம் வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சின்னசேலம், கச்சிராயபாளையம், ரிஷிவந்தியம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் தானியங்களை எடுத்துவந்து விற்பனை செய்து வருகிறார்கள். நேற்று 50 விவசாயிகள் 300 மூட்டை தானியங்களை எடுத்துவந்தனர். அதில் 250 மூட்டை மக்காச்சோளம், கம்பு, மணிலா, வரகு, உளுந்து உள்ளிட்ட தானியங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. இதனை ஈரோடு, விழுப்புரம், விருதுநகர், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டத்தில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் வாங்கி சென்றனர்.

100 கிலோ எடை கொண்ட மக்காச்சோளம் ஒரு மூட்டை குறைந்தபட்சம் ரூ1480க்கும், அதிகபட்சமாக ரூ.1555க்கும், ஒரு மூட்டை மணிலா குறைந்தபட்சம்

ரூ.4319க்கும், அதிகபட்சமாக ரூ. 6349 க்கும், உளுந்து ஒரு மூட்டை குறைந்தபட்சமாக ரூ.6149க்கும், அதிகபட்சமாக ரூ.6857க்கும் விற்பனை செய்யப்பட்டது நேற்று ஒருநாளில் மட்டும் பல்வேறு தானியங்கள் ரூ.3.50 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டதாக ஒழுங்குமுறை விற்பனைகூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்தியா தெரிவித்தார்.

## மானாவாரி உளுந்து பயிரில் பார்த்தீனிய செடி: விவசாயிகள் கவலை

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை அருகே செம்மணங்கூர் கிராமத்தில் உள்ள விவசாயிகள் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் மானாவாரியாக உளுந்து பயிரிட்டு வந்தனர். இந்நிலையில் தற்போது பூ வைத்து காய்க்கும் தருணத்தில் உளுந்து பயிரில் பார்த்தீனியம் எனப்படும் விஷத்தன்மை கொண்ட செடி அதிக அளவு வளர்ந்து வருவதால் உளுந்து பயிரின் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், காற்றின் மூலம் பார்த்தீனியம் செடிகளின் பூக்கள் பரவி ஒரு நிலத்தில் இருந்து அடுத்துள்ள நிலத்திலும அதிக அளவு வளர்ந்து வருகிறது. இந்த செடியினை அகற்றினாலும் முற்றிலும் அழிவது இல்லை. இந்த செடியின் மூலம் சுவாச கோளாறு ஏற்படுவதால் இதனை அகற்ற கூலி தொழிலாளர்கள் கூட வரமறுக்கின்றனர். இதனால் உளுந்து செடியில் உள்ள களைகளை கூட எடுக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த பார்த்தீனியம் செடி அதிக உயரத்துடன் வளர்ந்து உளுந்து செடியினை அழித்து வருகிறது. அதிக அளவு வளர்ந்துள்ள இந்த பார்த்தீனிய செடியினால் அறுவடைக்கு தயாராக உள்ள உளுந்துபயிர் சேதமாகும் நிலை உள்ளது. போதிய மழை இல்லாமல் ஏற்கனவே உளுந்து விளைச்சல்

குறைவாக உள்ள நிலையில் செம்மணங்கூர், புதுார், நாராயணபுரம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள விவசாய நிலத்தில் அதிக அளவு வளர்ந்துள்ள பார்த்தீனிய செடியினால் மேலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் காய்ந்து கருகும் பயிர்கள்

விழுப்புரம் : டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்திலும் கடும் வறட்சி காரணமாக 1000 ஏக்கருக்கு மேல் நெல், கரும்பு பயிர்கள் கருகியுள்ளது. தினம் ஒரு விவசாயிகள் செத்து மடிகிறார்கள். தமிழகத்தில் பருவமழையின் அளவு ஆண்டுதோறும் குறைந்துகொண்டு வருவதால் கடும் வறட்சியின் பிடியில் விவசாயம் உள்ளது. டெல்லா மாவட்டங்களில் கடும் வறட்சியால் நஷ்டத்தை சமாளிக்கமுடியாமல் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகள் அதிர்ச்சியிலும், தற்கொலையிலும் ஈடுபட்டு வருகின்றனர். டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் இந்த நிலை நீடித்து வருகிறது.

தமிழகத்தின் உள் மாவட்டங்களான விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நிலத்தடி நீரை நம்பியே பாசனம் செய்யப்பட்டு வருகிறது. விழுப்புரம் மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டம். அதற்கேற்ற விவசாய தொழிலாளர்களும் அதிகளவு உள்ளனர். கரும்பு, நெல் சாகுபடி அதிகளவு உள்ளது. குறைந்தது ஆண்டுக்கு 3 லட்சம் ஹெக்ேடரில்

கரும்பு, நெல்சாகுபடி செய்யப்படுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். மோட்டார் மூலம் பெரும்பாலான விவசாயிகள் நீர்பாசனம் செய்து வந்தனர்.

தற்போது விழுப்புரம் சுற்றுவட்டாரப்பகுதியான கொண்டங்கி, கப்பூர், தோகைப்பாடி, வேடம்பட்டு உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடிநீர்மட்டமும் குறைந்து விட்டது. கொண்டங்கி கிராமத்தை சேர்ந்த குமாரசாமி என்பவருக்கு சொந்தமான 4 ஏக்கர் நெற்பயிர்கள் காய்ந்து கருகியுள்ளது. அதே போல் தனபால் என்பவரது 3 ஏக்கர் நெற்பயிரும் பொங்கலுக்கு அறுவடைக்குதயராக இருந்தநிலையில் நெல்முளைப்புவிடும் நிலையில் தண்ணீர்பாசனமின்றி காய்ந்துகருகியுள்ளது.

இதே போல் மாவட்டத்தின் பல பகுதியிலும் 500 ஏக்கருக்கும் மேல் நெற்பயிர்கள் காய்ந்து கருகியுள்ளன.நெல் பயிருக்கு அடுத்தபடியாக கரும்பு பயிர்களும் போதிய நீர்பாசனமின்றி காய்ந்து கருகிவருகிறது. வாரம் ஒருமுறை தண்ணீர் பாசனம் செய்ய வேண்டிய கரும்புக்கு மாதம் ஒரு முறை என்பதே கேள்விக்குறியாக உள்ளது. இதனால் கரும்பு நடவு செய்த விவசாயிகளும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துள்ளனர். உரவிலை உயர்வு, பணத்தட்டுப்பாடு போன்ற கஷ்ட நேரத்தில் விவசாயம் செய்தாலும் வறட்சியால் அனைத்தும் பொசுங்கிவிட்டதாக விவசாயிகள் புலம்பிவருகின்றனர். பொறுத்துக்கொள்ளமுடியாத விவசாயிகள் தினமும் தற்கொலை முடிவில் ஈடுபட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் மரணத்தை தடுக்க

வேண்டிய தமிழகஅரசும் கண்டு கொள்ளாமல் இருப்பது பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் கொண்டங்கி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி குமாரசாமி கூறுகையில், எனக்கு சொந்தமாக 4 ஏக்கரில் நெல் பயிரிட்டிருந்தேன். ஒரு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் செலவு ஏற்பட்டது. கூட்டுறவு வங்கியில் ரூ.1 லட்சம் கடன்வாங்கி பயிர்சாகுபடி செய்தேன். தற்போது பொங்கலுக்கு அறுவடை செய்ய வேண்டும். ஆனால் தண்ணீர் இன்றி பயிர்கள் காய்ந்து கருகிவருகின்றன. செலவு செய்த பணமாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது பொய்த்து விட்டது. எனவே கடன் தொகையை தள்ளுபடி செய்து, வறட்சி நிவாரணம் வழங்கினால்தான் எங்களால் மீளமுடியும். இல்லையென்றால் விபரீதமான முடிவைதான் எடுப்போம் என்றார்.

மணல் கொள்ளையால் நிலத்தடி நீர் போச்சு விழுப்புரம் மாவட்டத்திற்கு நீர் ஆதாரமாக விளங்குவது தென்பெண்ணையாறு. கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக அரசு விதிகளை மீறி 3 அடிக்கும் கீழ் மணல் தரையளவு சுரண்டப்பட்டுள்ளது. இதனால் நிலத்தடிநீர் குறைந்து விவசாயம், குடிநீர் பாதிக்கும் என்று விவசாயிகளும், பொதுமக்களும் பல்வேறு போராட்டங்கள் நடத்தியும், ஆட்சியரிடமும் மனு கொடுத்தனர். அப்போது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் இன்று பயிர்கள் காய்ந்து கருகுவதால் விவசாயிகள் செத்து மடிகின்றனர். இன்னும் சில காலங்களில் குடிநீருக்கும் கடும் பஞ்சம் ஏற்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில் தொடரும் மரணங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் தேவதானம்பேட்டையை சேர்ந்த விஜயராகவன் என்ற விவசாயி மூன்றரை ஏக்கர்

குத்தகைக்கு எடுத்து நெல்பயிர் செய்திருந்தார். வறட்சியால், நீர்பாசனமின்றி பயிர் கருகியதால் தூக்குபோட்டு தற்கொலை செய்துகொண்டார். அதனைத்தொடர்ந்து நேற்று ஒரு விவசாயி அதிர்ச்சியில் இறந்துள்ளார். விழுப்புரம் அடுத்துள்ள அதனூரைச் சேர்ந்த மகாதேவன்(54) என்ற விவசாயி கரும்பு வயலுக்கு சென்றபோது காய்ந்து கருகியிருந்ததை பார்த்து அதிர்ச்சியில் இறந்துள்ளார். இப்படி தினம் ஒரு விவசாயிகள் மரணம் விழுப்புரம் மாவட்டத்திலும் தொடர்கிறது.

## கால்நடைகளுக்கான பொருட்கள் விற்பனை ஜோர்

தர்மபுரி: மாட்டுப்பொங்கலையொட்டி, நல்லம்பள்ளி வாரச்சந்தையில் மூக்கணாங்கயிறு, கழுத்து மணி விற்பனை ஜோராக நடந்து வருகிறது.பொங்கல் பண்டிகை, ஜனவரி 14ம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. பொங்கல் தினத்தன்று அதிகாலையில் புத்தாடை அணிந்து, சூரியனுக்கு மண்பானையில் பொங்கல் படைத்து வழிபடுவது வழக்கம். மறுநாள் 15ம் தேதி மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. அப்போது விவசாயிகள் தாங்கள் வளர்த்து வரும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக, மாடுகளை குளிப்பாட்டி, சந்தனம், குங்குமம், கலர் பொடிகள் பூசி, கழுத்து மணி, மூக்கணாங்கயிறுகளை கட்டி அலங்கரித்து பொங்கல் வைத்து வழிபாடு நடத்துவர். இந்நிலையில், நல்லம்பள்ளி வாரச்சந்தையில் மாடுகளுக்கு அலங்காரம் செய்ய, மூக்கணாங்கயிறு, கழுத்து மணி உள்ளிட்ட பொருட்களின் விற்பனை ஜோராக நடக்கிறது. ₹ 50 முதல் ₹ 250வரை

கயிறு உள்ளிட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதை விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

## பட்டு நூல், பட்டுக்கூடு விற்பனை அதிகரிப்பு

கோவை : கோவை பட்டுவளர்ச்சித்துறை அலுவலகத்தில் உள்ள பட்டுக்கூடு விற்பனை மையத்தில் தினசரி பட்டுக்கூடு விற்பனை ஏல முறையில் நடக்கிறது. இங்கு அன்னூர், தொண்டாமுத்தூர் உள்ளிட்ட கோவை மாவட்ட விவசாயிகளும், உடுமலை பகுதியை சேர்ந்த திருப்பூர் மாவட்ட விவசாயிகளும் அதிகளவில் பட்டுக்கூடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். சராசரியாக தினசரி ஆயிரம் கிலோ பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வருகிறது. இவற்றை வியாபாரிகள் மற்றும் பட்டுநூல் கூட்டுறவு சங்கத்தினர் கொள்முதல் செய்து வருகின்றனர்.

நேற்று நடந்த விற்பனையில் ஒரு கிலோ பட்டுக்கூடு குறைந்தபட்ச விலை கிலோ ரூ.325 ஆகவும், அதிகபட்ச விலை ரூ.467 ஆகவும், சராசரி விலை ரூ.440 ஆகவும் இருந்தது. அதே நேரத்தில் நேற்று பட்டு நூல் நிர்ணய விலை கிலோ ரூ.2,862 ஆக இருந்தது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு 22ம் தேதியன்று பட்டு நூல் விலை ரூ.2,516 ஆக இருந்தது. பின்னர் தினசரி இதன் விலை உயர்ந்து வந்தது.

கடந்த 10 நாளில் பட்டுநூல் விலை கிலோவிற்கு ரூ.346 உயர்ந்துள்ளது. பட்டுநூல் விலைக்கேற்ப பட்டுக்கூடு விலை நிர்ணயிக்கப்படுவதால், பட்டுக்கூடுகளின் விலையும் கடந்த 10 நாளில் கிலோவிற்கு ரூ.114 வரை உயர்ந்துள்ளது. பட்டுநூல் மற்றும் பட்டுக்கூடு விலை உயர்விற்கு, கர்நாடகாவிற்கு செல்லக்கூடிய

வர்த்தகர்கள் தமிழகத்திலேயே கொள்முதல் செய்வதால் விலை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

## சோழங்குரிச்சியில் அகத்தி நாற்றங்கால் உற்பத்தி

ஜெயங்கொண்டம்: ஜெயங்கொண்டம் அருகே சோழங்குரிச்சியில் புதுவாழ்வுதிட்டம் சார்பில் அகத்தி கன்றுகள் நாற்றாங்கால் உற்பத்தி பணிகளை கால்நடை பராமரிப்புதுறை மண்டல இணை இயக்குநர் ஆய்வு செய்தார். அரியலூர் மாவட்டம் புதுவாழ்வு திட்டம் சார்பில் 1.21லட்சம் அகத்தி கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு உற்பத்தி மையங்களை தா.சோழங்குரிச்சி, பரணம், உதயநத்தம் ஆகிய கிராமங்களில் மையங்கள் அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த மூன்று கிராமங்களிலும் பசுமை காய்கறி உற்பத்தியாளர் பூச்சரம் என்ற அமைப்பை சுயஉதவிக்குழுக்களால் அமைக்கப்பட்டு கால்நடை பராமரிப்பு துறையுடன் இணைந்து புதுவாழ்வுதிட்டம் செயல்படுத்தி வருகிறது. தா.சோழங்குரிச்சி, பரணம் ஆகிய கிராமங்களில் தலா 50ஆயிரம் கன்றுகளும் உதயநத்தம் கிராமத்தில் 21ஆயிரம் கன்றுகளும் நாற்றாங்காலில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் மையங்களை கால்நடை பராமரிப்புதுறை மண்டல இணை இயக்குநர் நசீர், துணை இயக்குநர் பாஸ்கரன், உதவி இயக்குநர் பாஸ்கரன் ஆகியோர் பணிகளை ஆய்வு செய்தனர். ஆய்வில் கன்றுகளில் பூச்சிவராமல் பாதுகாத்து 60 நாள் கன்றாக கால்நடைதுறைக்கு வழங்கிடவேண்டும் என கூறினார். மேலும் இதுபோன்று மற்ற கிராமங்களிலும் மகளிர் குழுக்கள் அரசு துறையுடன் இணைந்து பல்வேறு

துறைகளுடன் இணைந்து தொழில்கள் மூலம் தங்களையும் முன்னேற்றி மாவட்டத்தையும் முன்னேற்ற வேண்டும் என கேட்டுகொண்டார்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 4,671 பேருக்கு நலத்திட்ட உதவி

அரியலூர்: உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 4,671 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது என கலெக்டர் சரவணவேல்ராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:அரியலூர் மாவட்டத்தில் உழவர் பாதுகாப்பு திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ரூ.23 கோடியே 64 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் 45,877 பயனாளிகள் பயன்பெற்றனர்.மேலும், அதுபோன்று முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திடடத்தின் கீழ் நடப்பாண்டில் (2016-17) குடும்ப உறுப்பினர்களுக்கான திருமண உதவித்தொகை 75 பேருக்கு ரூ.6.54 லட்சமும், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டு இறந்துபோன பெற்றோர்களது ஆதரவற்ற 52 குழந்தைகளுக்கு மாதம் ரூ.ஆயிரமும் என ஆக மொத்தம் 4,671 பயனாளிகளுக்கு ரூ.391.14 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என அதில் தெரிவித்துள்ளார்.

## 2016ல் சராசரியை விட 200 மி.மீ மழை குறைவு

சிவகங்கை : சிவகங்கை மாவட்டத்தில் 2016ம் ஆண்டில் சராசரி அளவைவிட சுமார் 200 மி.மீ மழை குறைவாகப் பெய்துள்ளது. நீர்நிலைகளில் தண்ணீர்

இல்லாததால் தற்போது ஆங்காங்கே குடிநீர் பிரச்னை தலைதூக்கியுள்ளது. வரும் காலத்தில் இன்னும் கடுமையாக இருக்கும் என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 904.7 மி.மீ ஆகும். ஆனால், 2008ம் ஆண்டிற்குப் பிறகு அதிக அளவிலான மழை பெய்யவில்லை. 2008ம் ஆண்டில் அதிகபட்சமாக 1283 மி.மீ மழை பெய்தது. 2012ம் ஆண்டில் குறைந்தபட்சமாக 549 மி.மீ மழை பெய்தது. இதுதான் 2008 முதல் 2016 வரையிலான கடந்த 8 ஆண்டுகளில் பெய்த மிகக் குறைந்தளவு மழை.

2016ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 706.5 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. சராசரி அளவைவிட சுமார் 200 மி.மீ மழை குறைவாகும். கடந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் லேசான மழையே பெய்தது. வட கிழக்குப் பருவமழை பல்வேறு மாவட்டங்களில் சுமாராக பெய்த நிலையில் சிவகங்கை மாவட்டத்தில் லேசான மழையை பெய்தது. குறிப்பாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் இரவு மற்றும் பகலில் சாரல் மழை மட்டுமே பெய்தது.

தமிழக்ததைப் பொருத்தவரை வடகிழக்குப் பருவமழைக் காலத்தில்தான் அதிகமான மழை பெய்யும். இந்த மழை சிவஙெ்கை மாவட்டத்தின் விவசாயத்திற்கு மட்டுமின்றி மறு ஆண்டு கோடைக்காலம் வரை குடிநீருக்கும் பயன்படும். ஆனால் கடந்த ஆண்டு சராசரி மழை அளவான 904.7 மி.மீ அளவையே எட்டவில்லை.

மேலும், 2014, 2015ம் ஆண்டுகளைவிட வெகுவாக குறைந்துள்ளது. 2012, 2013ம் ஆண்டுகளில் மாவட்டம் முழுவதும் போதிய மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயம், குடிநீர் தேவைகளுக்கு நீரில்லை. கண்மாய்,

குளங்கள் முழுமையாக வறண்டன. தற்போதும் மாவட்டம் முழுவதும் இதே நிலையே காணப்படுகிறது. பயிர்கள் முற்றிலும் கருகிப்போய்விட்டன. அடுத்த சில மாதங்களுக்கு மழை பெய்ய வாய்ப்பில்லாத நிலையில், வரும் நாட்களில் குடிநீருக்குகடும் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் நிலவுகிறது. குளிர் காலமான தற்போதே ஆங்காங்கே குடிநீர் தட்டுப்பாடு தலைதூக்கிய நிலையில் இந்த ஆண்டு கோடைகாலத்தில் குடிநீர் பிரச்னையைச் சமாளிப்பது கடினம்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: இந்த ஆண்டு நான்கில் ஒரு பங்கு மழைகூடப் பெய்யவில்லை. எனினும் மூன்று பங்கு மழை நீர் என்ன ஆனது எனத் தெரியவில்லை. அனைத்துப் பகுதிகளிலும் கண்மாய், குளங்களில் குறைவான அளவு நீர்கூட எந்த மாதத்திலும் இருந்ததாக தெரியவில்லை. கண்மாய், குளங்களுக்கான நீர் வரத்து கால்வாய்கள் தூர்வாரப்படாதது, ஆக்கிரமிப்புகள் உள்ளிட்டவைகளே.

இதனால் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துகொண்டே வருகிறது. கண்மாய், குளங்களை பாதுகாக்க எவ்விதப் பாரபட்சமும் இன்றி நீர்ப்பிடிப்பு, நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றவும், தூர்வாரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மழை குறைவதால் ஆண்டுதோறும் விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்க, நீர் குறைவாகப் பயன்படும் மாற்றுப்பயிர் விவசாயம், நவீன நீர் பாய்ச்சும் முறைகளை மாவட்டத்தில் அதிகப்படியாகச் செயல்படுத்த வேண்டும்.

கோடைகாலக் குடிநீர் பிரச்னையைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை தற்போதிருந்தே எடுக்க வேண்டும். மாவட்டத்திற்கென தனியாக கூட்டுக்குடிநீர் திட்டங்கள் தொடங்க வேண்டும். இவ்வாறு கூறினர்.

| | | | |
|---|---|---|---|
| 2009ம் | ஆண்டு | 772 | மி.மீ |
| 2010ம் | ஆண்டு | 916 | மி.மீ |
| 2011ம் | ஆண்டு | 872 | மி.மீ |
| 2013ம் | ஆண்டு | 705 | மி.மீ |
| 2014ம் | ஆண்டு | 920 | மி.மீ |
| 2015ம் | ஆண்டு | 1097 | மி.மீ |

2016ம் ஆண்டு 706.5 மி.மீ

## வேளாண்துறையில் தற்காலிகப்பணி

சிவகங்கை : சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறையில் உழுவை துடைப்பாளர் பணிக்கு தற்காலிக பணிக்கு விண்ணப்பிக்க ஜன.10ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட நிர்வாகம் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாகவுள்ள உழுவை துடைப்பாளர் பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளது. முன்னுரிமை அடிப்படையில் பொதுப் பிரிவு, எஸ்.சி பிரிவில் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இப்பணிக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் நல்ல உடல் தகுதியுடன், தமிழ் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இயந்திரங்களுக்கான சிறு பழுதுகள் மற்றும் இயந்திரங்களுக்கு எண்ணையிடுதல் மற்றும் சுத்தம் செய்வதற்கான பொதுவான அறிவு பெற்றிருக்க வேண்டும். இலகு வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்சம் 18 வயது

நிறைவடைந்திருக்க வேண்டும். அதிகபட்சம் எஸ்சி பிரிவினர் 01-08-2016 அன்று 35 வயதுக்குள் இருக்க வேண்டும். இதர வகுப்பினர் 01-08-2016 அன்று 30 வயதுக்குள் இருக்க வேண்டும். தகுதியான ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டும் ஜன.10ம் தேதிக்குள், செயற் பொறியாளர் (வே.பொ), கல்வித்துறை கட்டிடம் (2வது தளம்), கலெக்டர் அலுவலக வளாகம், சிவகங்கை என்ற முகவரியில் நேரடியாகச் சென்று விண்ணப்பிக்கலாம்.

## பயிர்கள் கருகியதால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ₹ 25 லட்சம் இழப்பீடு திமுக கூட்டத்தில் தீர்மானம்

சேலம்: தமிழகத்தில் பயிர்கள் கருகியதால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு, தலா ₹ 25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என திமுக கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சேலம் மத்திய மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி மற்றும் மீனவர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம், கலைஞர் மாளிகையில் நேற்று நடந்தது. மத்திய மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் மணி, மாநகர அமைப்பாளர் ஆறுமுகம், மீனவர் அணி மாவட்ட அமைப்பாளர் சீனிவாசன், மாநகர அமைப்பாளர் தஸ்தாகிர் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாவட்ட அவைத்தலைவர் கலையமுதன், பொருளாளர் சுபாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மத்திய, மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் எம்எல்ஏ கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து, மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட

ஒன்றிய, பேரூர், பகுதி, கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர் அணி மற்றும் மீனவர் அணி நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

கூட்டத்தில், தமிழகத்தில் தண்ணீரின்றி கருகிய பயிர்களை கண்டு உயிரிழந்த மற்றும் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ₹ 25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். வறட்சியை கருத்தில் கொண்டு, தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை 100 நாட்களிலிருந்து, 200 நாட்களாக அதிகரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், தலைமை ெசயற்குழு உறுப்பினர்கள் சூடாமணி, ராஜேந்திரன், தீர்மான குழு உறுப்பினர் தாமரைகண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் நாசர்கான், பூபதி, மத்திய மாவட்ட துணை செயலாளர்கள் ரகுபதி, லதா, திருநாவுக்கரசு, மாநகர செயலாளர் ஜெயகுமார், இளைஞரணி அறிவழகன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## காவப்பட்டியில் மரக்கன்று நடும் விழா

போச்சம்பள்ளி: காவப்பட்டி கிராமத்தில், அரசு பள்ளி நாட்டு நலப்பணி திட்ட முகாமில் மரக்கன்றுகள் நடப்பட்டது.

போச்சம்பள்ளி தாலுகா நாகரசம்பட்டி ராமசாமி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சார்பில், காவப்பட்டி கிராமத்தில் நாட்டு நலப்பணி திட்ட முகாம் நடை பெற்றது.

அப்போது, அங்குள்ள கோயில்களில் வெள்ளை அடித்தல், சாலையின் இருபுறமும் இருந்த முட்புதர்களை அகற்றுதல் உள்ளிட்ட தூய்மை பணிகளை நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் செய்தனர்.இதன் நிறைவு விழாவுக்கு, மாவட்ட கல்வி அலுவலர் அகமது பாஷா, மாவட்ட தொடர்பு அலுவலர் ராஜசேகர் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர். நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் ராஜேந்திரன், திட்ட அலுவலர் அருண்குமார், உதவி அலுவலர் சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## குப்பை உருவாகும் இடத்திலேயே இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம்

திருப்பூர் : திருப்பூர் மாநகராட்சியை முழு சுகாதாரமான மாநகராட்சியாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களிடையே சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளுக்கு ஒரு நபர் வீதம் 60 சுகாதார பரப்புரையாளர்கள் நியிமிக்கப்பட்டுள்ளனர். மேலும் குப்பை உருவாகும் இடத்திலேயே இயற்கை உரம் தயாரிக்கும் திட்டமும் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதுகுறித்து திருப்பூர் மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அசோகன் தெரிவிக்கையில்: தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களிடையே சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த திருப்பூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளுக்கு ஒரு நபர் வீதம் 60 சுகாதார பணியாளர்கள் நியிமிக்கப்பட்டுள்ளனர். சுகாதார பணியாளர்கள் மாநகராட்சி அலுவலர்களுடன் இணைந்து பொது மக்கள் தங்களது பகுதியை எவ்வாறு தூய்மையாக பராமரிக்க

வேண்டும் என்பதையும், திறந்து வெளியில் இயற்கை உபாதைகளை கழித்தல் கூடாது, அனைவரும் கழிப்பறைகளை பயன்படுத்த வேண்டும். பொது இடங்களில் குப்பைகளை கொட்ட கூடாது. தொற்று நோய் பரவாமல் சுற்றுபுறத்தை தூய்மையாக வைக்க வேண்டும் உள்ளிட்ட அம்சங்களை பொது மக்களிடையே எடுத்து கூறி நகரம் தூய்மையாக இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குப்பை உருவாகும் இடத்திலேயே இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதிக அளவில் உணவு கழிவுகள் உருவாகும் இடத்திலேயே இயற்கை உரங்களை தயாரிக்கப்படுகிறது. உணவு விடுதிகள், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் உணவு கழிவுகள் அதிக அளவில் உருவாகின்றது. அதனை அப்பகுதிலேயே குழிகள் தோண்டப்பட்டு கழிவுகளை குழியில் கொட்டி வர வேண்டும், குழி நிரம்பிய பின்பு அதனை 45 நாட்களுக்கு முடிவிட வேண்டும்.

பின்னர் அதனை இயற்கை உரமாக நாம் அதனை பயன்படுத்தி கொள்வதோடு சுற்றுபுறசூழலும் தூய்மையாக இருக்க பேருதவியாக அமையும். தற்பொழுது நமது மாநகராட்சியில் சந்தைபேட்டை, உழவர் சந்தை , நஞ்சப்பா, கே.எஸ்.சி மற்றும் ஜெய்வாபாய் பள்ளிகளிலும், குமரன் , எல்.ஆர்.ஜி மற்றும் சிக்கண்ணா கல்லூரிகளிலும், வேலன் மற்றும் காயத்திரி உணவு விடுதிகளிலும் குப்பை உருவாகும் இடத்திலேயே இயற்கை உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும் என தெரிவித்தார்.

## ரபி பருவ காப்பீட்டு திட்டத்தில் தோட்டக்கலை பயிருக்கு 5% பிரிமியம் மத்திய அரசின் 15ம் தேதிவரை சேரலாம்

கரூர்: ரபி பருவத்திற்கு பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் சேர வரும் 15ம் தேதி வரை விவசாயிகள் பிரிமியம் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து கலெக்டர் தெரிவித்துள்ளதாவது: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய, மாநில அரசுகள் மானியத்துடன் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் 2016- 17ம் ஆண்டு ரபி பருவத்தில் செயல்படுத்தப்படுகிறது. தற்போது செயல்படுத்தப்படும் பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் விதைப்பு தவிர்த்தல், விதைப்பு தோல்வியுறுதல், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகள் போன்ற அனைத்து இனங்களுக்கும் பயிர்காப்பீடு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ரபி பருவத்தில் நெற்பயிருக்கு இக்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் ரவி பருவத்தில் மக்காசோளம், சோளம், நிலக்கடலை, எள்,உளுந்து, துவரை, கரும்பு போன்ற பயிர்களுக்கும் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கிராமங்களை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் பயிர்கடன் பெறும்போது கட்டாயமாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் இத்திட்டத்தில் விருப்பத்தின் பேரில் சேரலாம்.

இப்பயிர்களுக்கு ரபி பருவத்திற்கு 1.5 சதவீத காப்பீட்டுத் தொகை பிரிமியமாக செலுத்த வேண்டும். மேலும் வருடாந்திர வணிக, தோட்டக்கலை பயிர்களான

வாழை, மரவள்ளி, வெங்காயம் போன்ற பயிர்களுக்கு 5 சதவீதம் பிரிமியம் செலுத்தினால் போதுமாWனது.

கரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்திட அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனிஆப் இந்தியா லிட் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 15-1-2017 வரை விவசாயிகள் பிரிமியத்தை செலுத்தி தங்களை இணைத்துக் கொள்ளலாம். பிரியமித்தை தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் செலுத்தலாம். மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுக வேண்டும். இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் கட்டமில்லா தொலைபேசி எண் 1800 1036565 தொடர்பு கொண்டும் விவரம் பெறலாம். பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பங்கு பெற்று பயன்பெறுமாறு கரூர் மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## கடும் பனிப் பொழிவால் கருகி வரும் பயிர்கள்

கரூர்: கரூர் மாவட்டத்தில் கடும் பனிப் பொழிவால் பயிர்கள் கருகி வருகின்றன. கரூர் மாவட்டத்தில் கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை வட்டாரத்தில் ஒருபகுதி காவிரி பாசன பகுதியில் உள்ளது. காவிரி மற்றும் அமராவதி பாசன பகுதிகளில் பாசனத்திற்கு போதுமான நீர்கிடைக்காததால் கிணற்றுப்பாசனத்தை பயன்படுத்தி விவசாயிகள்பயிர் செய்து வருகின்றனர். ஆங்காங்கே நெல், கரும்பு, வாழை, வெற்றிலை பயிரிட்டுள்ளனர். அமராவதி பாசனத்தில் கரும்பு தவிர அனைத்து பயிர்களும் கடும் பனிப்பொழிவால் கருகி வருகின்றன.

இது குறித்து அமராவதி பாசன நீரை பயன்படுத்தும் விவசாய சங்கத் தலைவர் ராமசாமி கூறுகையில், அமராவதி ஆற்று நீரை நம்பி 15ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. கரூர் மாவட்டம் கருப்பம்பாளையத்தில் இருந்துஅமராவதி ஆற்றுநீர் செட்டிபாளையம் தடுப்பணைக்கு வருகிறது. இங்கிருந்து பள்ளபாளையம், சணப்பிரட்டி, பஞ்சமாதேவி, சோமூர், கோயம்பள்ளி, மேலப்பாளையம், மணவாசி, மாயனூர், அணைப்பாளையம் வழியாக இரு ராஜவாய்க்காலாக செல்கிறது. இந்த அனைத்து வாய்க்கால்களிலும் தண்ணீர் அறவே இல்லை. கிடைக்கும் நீரை வைத்து பயிர் செய்தவர்களும் கடும் பனிப்பொழிவால் பயிர்கள் கருகிவருவதால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரும்பு தவிர அனைத்து பயிர்களும் கருகிவரும் நிலையில் நெற் பயிருக்கு அதிகம் பாதிப்பு ஏற்படுகிறது என்றார்.காவிரி பாசன பகுதியில் வாழை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. வாழை இலைகள் வளர்ச்சியின்றியும் காய்கள் சிறுத்தும் காணப்படுகிறது. வெற்றிலை பயிரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

## வெண்டையில் நோய் தாக்குதல் அதிகரிப்பு தோட்டக்கலை துறை ஆலோசனை

சின்னமனூர் : வெண்டையில் காய் புழு நோய் தாக்குதல் ஏற்பட்டால் தப்பிக்கும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர். மாவட்டத்தில் போதிய நீராதாரம் இல்லாததால் கிணற்றுநீர் பாசனம் மூலம் கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், தக்காளி உள்ளிட்டவை அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தற்போது பயிரிடப்பட்டுள்ள வெண்டையில் காய்ப்புழு தாக்குதல் அதிகமாக ஏற்பட்டுள்ளதால், செடியிலேயே அழுகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: காய் புழு தாக்குதல் ஆரம்ப கட்டமாக இருந்தால் என்டோசல்பான் அல்லது குளோரி பைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அளவிலும், தாக்குதல் அதிகளவில் இருந்தால் டிசைடர் மருந்து 1 லிட்டருக்கு 1 மில்லி கலந்து இரண்டு மூன்று நாட்களுக்கு தெளிக்க வேண்டும். தாக்குதல் புழுவின் பரிணாமம் முட்டை, புழு என பல்வேறு கட்டங்களாக இருப்பதால் லார்வின் மருந்தை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் கலந்து தெளித்து வந்தால் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம் என்று கூறினர்.

## பெரியாறு அணை நீர்மட்டம் **111.30** அடியாக குறைவு

கூடலூர் : முல்லைப்பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் நீர்வரத்து குறைந்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து நேற்று 111.30 அடியானது. இது கடந்த ஆண்டு இதே நாளில் இருந்த நீர்மட்டத்தைவிட 26.50 அடி குறைவாக உள்ளது. நேற்றைய நிலவரப்படி, 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் 111.30 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 14 கனஅடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 200 கனஅடியாகவும் இருந்தது. அணையின் இருப்புநீர் 1118 மில்லியன் கனஅடியாக உள்ளது.

71 அடி உயரமுள்ள வைகையின் நீர்மட்டம் 25.52 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 63 கனஅடியாகவும், அணையிலிருந்து மதுரை குடிநீருக்காக

வினாடிக்கு 40 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்புநீர் 223 மில்லியன் கனஅடியாக உள்ளது.

57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 34.70 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்தும், நீர் வெளியேற்றமும் இல்லை. அணையின் இருப்புநீர் 122.59 மில்லியன் கனஅடியாக உள்ளது.

126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 60.18 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து இல்லை. நீர்வெளியேற்றம் வினாடிக்கு 3 கனஅடியாக இருந்தது. அணையின் இருப்பு நீர் 22.51 மில்லியன் கனஅடியாக உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் பெரியாறு அணையின் நீர்மட்டம் 137.80 அடியாகவும், அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 539 கனஅடியாகவும் இருந்தது. அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 1706 கனஅடியாகவும், அணையின் இருப்புநீர் 6572 மில்லியன் கனஅடியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## நாமகிரிப்பேட்டை வேளாண் விற்பனை சங்கத்தில் **315** மூட்டை மஞ்சள் **₹ 16** லட்சத்திற்கு ஏலம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் செவ்வாய் கிழமையி–ல் மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது . சேலம், ராசிபுரம், நாமக்கல், சேந்தமங்கலம், திருச்சி மற்றும் ஈரோட்டில் இருந்து விவசாயிகள் மஞ்சளை கொண்டு வருவது வழக்கம்.அதன் படி நேற்று

நடைபெற்ற ஏலத்தில், விராலி மஞ்சள் 222 மூட்டை, உருண்டை மஞ்சள் 88 மூட்டையும் , பனங்காலி மஞ்சள் 5 மூட்டைகள் என மொத்தம் 315 மூட்டைகளை விவசாயிகள் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. விராலி ரக மஞ்சள் அதிகப்பட்சம் குவிண்டால் ஒன்றுக்கு ₹ 9,389 க்கும் , குறைந்த பட்சம் ₹ 8,099 க்கும் , உருண்டை ரக மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு அதிகப்பட்சம் ₹ 8,569 க்கும் , குறைந்தப்பட்சம் ₹ 7,559 க்கும் , பனங்காலி ரக மஞ்சள் அதிகப்பட்சம் ₹ 18, 365 க்கும் , குறைந்தப்பட்சம் ₹ 10,372 க்கும் என மொத்தம் 315 மூட்டைகள் ₹ 16 லட்சத்திற்கு விற்பனையானது.

## ஏக்கருக்கு 4 டன் விளைச்சல்: கரும்பு விவசாயிகள் கண்ணீர்

ஈரோடு : வறட்சியின் காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 40 டன்னுக்கு பதிலாக 4 டன் மட்டுமே விளைந்துள்ளதால் கரும்பு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவ மழை இரண்டுமே பொய்த்து விட்டதால் மாநிலம் முழுவதும் வறட்சி நிலவி வருகின்றது. மழையை மட்டுமே நம்பி இருக்கும் மானாவாரி நிலங்கள் வானம் பார்த்த பூமிகளாக உள்ளன. மாநிலத்தில் உள்ள முக்கிய அணைகளில் நீர் இருப்பு இல்லாததால் பாசன பகுதிகளிலும் வறட்சி காணப்படுகின்றது. ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் பாசன பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவி வருகின்றது. பவானிசாகர் அணையின் மூலம் பாசனம் பெற்று வரும் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் 15 ஆயிரம் ஏக்கர் உள்ளன.

ஆண்டுக்கு மூன்று போகம் விளைவிக்க கூடிய இப்பாசன பகுதியில் மஞ்சள், வாழை, கரும்பு, நெல் ஆகியவை பயிரிடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் கரும்பு, மஞ்சள், வாழை ஆகியவை காய்ந்து வருகின்றது.

நடப்பு பருவத்திற்கான கரும்பு அறுவடை பணிகள் தற்போது தொடங்கி நடைபெற்று வருகின்றது. ஏக்கர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 40 டன் முதல் 55 டன் வரை கரும்பு விளைச்சல் இருக்கும். ஆனால் இந்த ஆண்டு ஏக்கர் ஒன்றுக்கு 4 டன் மட்டுமே விளைச்சல் கிடைத்துள்ளதாகவும், இதனால் கடும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இது குறித்து காலிங்கராயன் பாசன சபை தலைவர் வேலாயுதம் கூறும்போது, பாசன பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் அடியோடு சரிந்துவிட்டது. கிணறுகள், போர்வெல்கள் காய்ந்துவிட்டன. பாசூரில் பழைமை வாய்ந்த ஊர்கிணறு உள்ளது. 100 ஆண்டுகளாக இந்த கிணறு வற்றியது கிடையாது. ஆனால் இந்த ஆண்டு காய்ந்துவிட்டது. 700 அடி போடப்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் கூட காய்ந்துவிட்டது. பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் கரும்பு,வாழை, மஞ்சள் ஆகியவற்றை பயிரிட்டனர். தற்போது கரும்பு அறுவடை பணிகள் தொடங்கி உள்ளது. தண்ணீர் வளம் கொண்டு காலிங்கராயன் பாசன பகுதிகளில் ஏக்கர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 40 டன் கரும்பு விளைச்சல் இருக்கும்.

ஆனால் இந்த ஆண்டு வறட்சியினால் 4 டன் கரும்பு விளைச்சல் கூட கிடைக்கவில்லை. இதனால் கடுமையான நஷ்டத்தை சந்திக்க வேண்டி உள்ளது. முதலீட்டு செலவை கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாசூர், வடக்குபுதுப்பாளையம், சாவடிபாளையம், கணபதிபாளையம், மலையம்பாளையம், தாமரைப்பாளையம், ஒத்தக்கடை உள்ளிட்ட பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வருகின்றது. கோடை காலம் தொடங்குவதற்கு முன்பாகவே வறட்சியின் தாக்கம் தொடங்கிவிட்டது. எனவே தமிழக அரசு வறட்சி பாதித்த பகுதிகளை கண்டறிந்து உரிய நிவாரண தொகை வழங்க முன்வர வேண்டும். இவ்வாறு வேலாயுதம் கூறினார்.

## வரும் 20ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

ஊட்டி : தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்காகன குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 20ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இந்த கூட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதேனும் இருப்பின் தெரிவிக்கலாம். விவசாயிகள் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து விவசாயம் சம்பந்தப்பட்ட நீர்பாசனம், இடு பொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் தெரிவிக்கலாம். கோரிக்கைள், தோட்டக்கலை இணை இயக்குநர், தபால்பெட்டி எண். 72, ஊட்டி

643001 என்ற அலுவலக முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவே அனுப்பி வைக்கலாம்.

## கொட்டும் உறைபனியால் மலர் செடிகள் கருகின

ஊட்டி : தொடர்ந்து ஊட்டியில் உறைபனி கொட்டி வரும் நிலையில், மரவியல் பூங்காவில் உள்ள மலர் செடிகள் மற்றும் அலங்கார செடிகள் கருகியது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதமாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக மாவட்டத்தில் உறை பனியின் தாக்கம் சற்று அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக, ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பனியின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

இதனால், செடி,கொடிகள் மற்றும் தேயிலை செடிகள் கருகி விட்டன. தாழ்வான மற்றும் நீர் நிலைகள் நிறைந்த பகுதிகளில் பனி கொட்டுவதால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஊட்டி மரவியல் பூங்காவில் உள்ள அலங்கார செடிகள் மற்றும் மலர் செடிகளை கோத்தகிரி மலர் செடிகளை கொண்டு பாதுகாத்த போதிலும், ஏரி கரையோரம் என்பதால் இங்கு பனியின் தாக்கம் மிகவும் அதிகமாக காணப்படுகிறது. இதனால், இங்குள்ள மலர் செடிகள் மற்றும் அலங்கார செடிகள் பனியில் கருகியுள்ளன. தொடர்ந்து பனி கொட்டி வருவதால், இப்பூங்காவில் உள்ள அலங்கார செடிகளை பாதுகாக்க முடியாமல் தோட்டக்கலைத்துறையினர் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

## வரத்து குறைவால் பூக்கள் விலை விர்ர்ர்...

மதுரை : வரத்து குறைவு காரணமாக மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூ உள்ளிட்ட அனைத்து பூக்களின் விலையும் அதிகமாகியுள்ளது. மதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து விளைச்சலாகும் பூக்கள் தினமும் விற்பனைக்காக மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது பனிப்பொழிவு காரணமாக பூக்கள் வரத்து குறைந்துள்ளது. குறிப்பாக மல்லிகைப்பூ வரத்து வெகுவாக குறைந்துள்ளது.

தினமும் ஆயிரம் கிலோவுக்கும் மேல் கொண்டு வரப்படும் மல்லிகைப்பூ தற்போது 500 கிலோவுக்கும் குறைவாகவே கொண்டு வரப்படுகிறது. இதனால் கடந்த வாரம் கிலோ ரூ.80 முதல் ரூ.100க்குள் விற்பனையாகி வந்த மல்லிகைப்பூ விலை நேற்று கிடுகிடுவென உயர்ந்து ரூ.300க்கு விற்பனையானது.

இதுகுறித்து பூ மார்க்கெட் சங்க தலைவர் மனோகரன் கூறும்போது, ''மல்லிகைப்பூ வரத்து வெகுவாக குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது. இதேநிலை நீடித்தால் பொங்கல் உள்ளிட்ட விசேஷ தினங்களில் மல்லிகைப்பூ விலை மேலும் உயர வாய்ப்புள்ளது'' என்றார்.

பூ மார்க்கெட்டில் நேற்று பூக்கள் விலை நிலவரம் (கிலோ கணக்கில்): மல்லிகைப்பூ ரூ.300, செவ்வந்தி ரூ.25, ரோஸ் ரூ.60, பிச்சி ரூ.200, அரளி ரூ.60, பட்டன் ரோஸ் ரூ.100, முல்லை ரூ. 600. மல்லிகை ஒரு கிலோ ரூ. 300

## தண்ணீரின்றி வாடும் மிளகாய் செடிகளை காப்பாற்ற விவசாயிகள் தீவிர முயற்சி

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் கருகி வரும் மிளகாய் செடிகளை காப்பாற்ற பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி விவசாயிகள் பாய்ச்சி வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சோழந்தூர், சேத்திடல், செங்குடி, புல்லமடை,

இரட்டையூரணி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் தற்போது மிளகாய் செடிகள் நட்டுள்ளனர். போதிய மழை இல்லாததால் நெற்பயிர்களை அழித்து விட்டு மிளகாய் செடிகள் நட்டனர். ஆனால் மிளகாய் செடிகளையும் காப்பாற்ற தண்ணீர் இல்லாததால் அவை கருகி வருகிறது.

இதற்காக விவசாயிகள் பல கிலோ மீட்டர் தூரத்திலிருந்து தண்ணீரை பணம் கொடுத்து வாங்கி பாய்ச்சும் அவல நிலையில் உள்ளனர்.

இதுகுறித்து விவசாயி மகாலிங்கம் கூறியது, இரண்டு முறை நெல் விதைத்தும் பலன் இல்லை. போதிய மழை இல்லாததால் அதை அழித்து விட்டு மிளகாய் செடிகளை நட்டோம். அதற்கும் தண்ணீர் இல்லாததால் விலை கொடுத்து வாங்கி பாய்ச்சுகின்றோம். ஏக்கருக்கு 10 ஆயிரம் ருபாய் வரையிலும் தண்ணீருக்காக செலவு செய்கிறோம் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இப்படிக்கு இவர்கள்: நஷ்டத்தில் பங்குகொள்வோம்!



பருவமழை பொய்த்ததாலும், பயிர்கள் கருகியதாலும் கடந்த சில மாதங்களில் தமிழகத்தில் 80-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளதாகச் செய்திகள் வருகின்றன. விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வது அவர்களது குடும்பத்தினருக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த நாட்டுக்குமே மிகப்பெரும் இழப்பாகும். ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் செய்வோர் வேறு தொழில்களுக்கு மாறிக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலை நீடிக்கா வண்ணம், மத்திய அரசும் மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளின் தொழில் நஷ்டத்திலும் அரசு பங்குகொள்ள வேண்டும். இஸ்ரேல் நாட்டில் விவசாயத் தொழிலில் பல தொழில்நுட்பங்களைப் புகுத்தி சாதனை படைத்துக்கொண்டிருப்பதை நாமும் பின்பற்ற வேண்டும்.

*- எம்.ஆர்.லட்சுமிநாராயணன், காக்காவேரி.*

**சுவாரசியத் தொடர்**

டி.ஏ.நரசிம்மனின், ‘என்னருமைத் தோழி’ புதிய தொடர் படிப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. ஜெயலலிதாவைப் போல சுவாரசியமான வாழ்க்கையை யாரும்

வாழ்ந்திருக்க வாய்ப்பில்லை. அவரது வாழ்வில் நிகழ்ந்த பழைய சம்பவங்களை இத்தொடர் மூலம் அறிய ஆவலாக உள்ளோம்.

*- நன்னிலம் இளங்கோவன், மயிலாடுதுறை.*

**பிம்ப அரசியல் ஒழியுமா?**

நாயக பிம்பம், கருணாநிதி எதிர்ப்பு என்கிற தாரக மந்திரத்துடன் பெரிய கொள்கைகள் எதுவுமின்றித் தொடங்கப்பட்ட இயக்கம் அதிமுக. 40 வருடங்களுக்கு மேல் தமிழகத்தில் ஒரு தனிநிகர் இயக்கமாக இருந்த அந்த இயக்கத்துக்கு இப்போது பிம்பம்தான் பிரச்சினை. தேசியக் கட்சிகள் எதாவது கொள்கை கொண்டு அரசியல் புரியும்போது, மாநிலக் கட்சிகளில் திமுக, பாமக, விசிக தவிர்த்து எந்தக் கட்சிக்கும் தனித்த கொள்கை இருப்பதாகத் தெரியவில்லை. மிகச் சிறந்த அரசியல் ஆளுமைகள் இருந்த, இருக்கின்ற தமிழகம் இவ்வளவு காலம் பிம்பச் சிறைக்குள் இருந்தாகிவிட்டது. இனியாவது அதிலிருந்து மீண்டு வருமா?

*- விளதை சிவா, சென்னை.*

**வேடிக்கை நாடகம்**

முதல்வர் பொறுப்பினை சசிகலா ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையினை அமைச்சர்கள், மக்களவைத் துணை சபாநாயகர் (டிச.3) உள்ளிட்ட பலரும் முன்வைப்பது வேடிக்கையாக இருக்கிறது. நேரடியாக ஓ.பி.எஸ்.ஐச் சந்தித்து ராஜிநாமா செய்யுமாறு கேட்டுக்கொள்வது சரியான அணுகுமுறையாகும். அவர் மறுத்தால், அவர்களது கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடத்தி முடிவெடுக்க வேண்டும். மேடைகள், அறிக்கைகள் மூலம் இவ்விவாதம் நடைபெறுவது, முதல்வரைச் செயலிழக்கச் செய்யும். சசிகலா கூறிய ராணுவ கட்டுப்பாடு இதுதானோ? தனக்கு விருப்பமில்லாததுபோலவும் பெரும்பான்மையோர் விருப்பத்துக்குத் தலை வணங்கிப் பொறுப்பேற்பதாகவும் சொல்ல இப்படியொரு நாடகம் போடப்படுகிறது என்பதை மக்கள் அறிவார்கள்.

*- ச.சீ.இராஜகோபாலன், சென்னை.*

**பாதுகாப்பும் சர்ச்சையும்!**

டிச. 30-ல் வெளியான, ‘தமிழகம் பேசியது 2016’ பகுதியில், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆளுமை, தன்னம்பிக்கை, ஆட்சியின் நிறை-குறை பற்றி விவரிக்கப்பட்டிருந்தது. தமிழக அரசியலில் இதுவரை இல்லாத வகையில் தேர்தல் கூட்டணி குறித்துக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு, தொடர்ந்து ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டது அவரது வரலாற்றுச் சாதனை. அதனை முறியடிப்பது கடினம். மத்திய அரசின் 'இசட் பிளஸ்' பாதுகாப்பில் இருந்த ஜெயலலிதாவின் மரணம் சர்ச்சையாகி, சிகிச்சை குறித்த சந்தேகம் மூலம் நீதிமன்றம் வரை சென்றுள்ளது. எனவே, உண்மை நிலை அவரை நேசித்த மக்களுக்குத் தெரிய வேண்டியது அவசியம்.

**தன்னார்வ, சேவை அமைப்புகள் இணைந்து சென்னையில் 3 ஆண்டுகளில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட திட்டம்**

தமிழர் தொழில் வணிக வேளாண் பெருமன்றம் நிறுவனர் ம.ஜெகத் கஸ்பார் சென்னையில் நேற்று அளித்தப் பேட்டி:

வார்தா புயலால் சென்னையில் லட்சத்துக்கும் மேலான மரங்கள் விழுந்துள்ளன. ஏற்கெனவே பெருகி வரும் வாகனப் பெருக்கம், நீர்நிலை கள் இழப்பு போன்றவற்றுடன் பசுமை இழப்பும் சேர்ந்துள்ளதால் சென்னையின் வெப்பநிலை உயரும் நிலை உள்ளது. அதனால் நோய்கள், புறநகரில் விவசாய பாதிப்பு, குடிநீர் நெருக்கடி போன்றவையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

சென்னை நகரின் பசுமை பாது காப்பு வளையத்தை மீட்டு இழந்த மரங்களைவிட அதிக எண்ணிக்கை யில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் அறிவித்துள்ளன. அவற்றுடன் இணைந்து தமிழர் தொழில் வணிக வேளாண் பெருமன்றம் ரோட்டரி, லயன்ஸ், விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம், எக்ஸ்னோரா, புன்னகை பூமி அறக்கட்டளை உள்ளிட்ட தன்னார்வ மற்றும் சேவை அமைப்புகள் இணைந்து மீண்டும் பசுமைச் சென்னை திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம்.

இந்த திட்டத்தில் சென்னையில் 3 ஆண்டுகளில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட உள்ளன. முதல் கட்டமாக பள்ளிகள், கல்லூரிகள், கோயில்கள் உள்ளிட்ட இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இரண்டாம் கட்டமாக அரசு மற்றும் பொது நிலங்களில் மரக்கன்றுகள் நடப்படும். புங்க, வேம்பு, பூவரசு போன்ற மண் சார்ந்த மரங்களும், பேரிடர்களை தாங்கும் மரங்களும் நடப்பட உள்ளன.

## பொதுமக்கள், விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது: கிராமங்களுக்கு 40% பணம் கொண்டு செல்ல வேண்டும் - வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி உத்தரவு



பண மதிப்பு நீக்கம் காரணமாக நாட்டில் பணப்புழக்கம் குறைந்தி ருக்கிறது. இந்த பாதிப்பு அனைத்து இடங்களிலும் இருக் கிறது. குறிப்பாக கிராமப்புற மக்கள் மற்றும் விவசாயிகள் பாதிக்கப் படக் கூடாது என்பதற்காக கிராமங் களுக்கு 40 சதவீத ரூபாய் நோட்டுகளை வங்கிகள் கொண்டு செல்ல வேண்டும் என ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) உத்தரவிட்டிருக்கிறது.

ரிசர்வ் வங்கி மேலும் கூறி யிருப்பதாவது:

வங்கிகள் எடுத்துச்செல்லும் ரூபாய் நோட்டுகள் அனைத்து இடங்களுக்கும் சரிசமமாய் சென்று சேரவில்லை. குறிப்பாக கிராமப்புற தேவைகளுக்கு ஏற்ப அங்கு ரூபாய் நோட்டுகள் சென்று சேரவில்லை. அதனை சரி செய்வதற்காக ஏற்கெனவே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு 40 சதவீத ரூபாய் நோட்டுகள் கிராமப்புற பகுதிகளுக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டிருக் கிறது. கிராமப்புற வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், தனியர் ஏடிஎம், தபால் நிலையங்கள் ஆகியவற் றுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்தின் கிராமப்புற தேவையும் வெவ் வேறாக இருக்கும். அதனால் மாவட் டத்துக்கு ஏற்ப வங்கிகள் தங்களு டைய உத்திகளை மாற்றிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாவட் டத்துக்கும் எவ்வளவு தேவை என்பதை ரிசர்வ் வங்கி ஏற்கெனவே கணித்து வைத்திருக்கிறது.

கிராமங்களுக்கு 500 ரூபாய்க்கு கீழே இருக்கும் ரூபாய் நோட்டு களை எடுத்துச்செல்ல வேண்டும். ஏடிஎம்களில் 500 மற்றும் 100 ரூபாய் நோட்டுகளை நிரப்ப வேண்டும். நாணயங்கள் வேண்டும் என்றால் ரிசர்வ் வங்கியிடம் வங்கிகள் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் என ஆர்பிஐ கூறியிருக்கிறது.

பண மதிப்பு நீக்கம் செய்யப்பட்டு 50 நாட்கள் கடந்த பிறகும் பணப்புழக்கத்தில் முன்னேற்றம் இல்லை. மேலும் தங்களது வங்கிக் கணக்கிலிருந்து வாரத்துக்கு

24,000 ரூபாய் மட்டுமே எடுக்க முடியும் என்ற கட்டுப்பாட்டை மத்திய அரசு இன்னும் விலக்கிக் கொள்ளவில்லை.

கிராமப்புற பகுதிகள் மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கு அரசு அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று தனது புத்தாண்டு உரையில் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## பப்பாளி பழத்திற்கு மவுசு கிராமங்களிலும் விற்பனை

காஞ்சிபுரம்: கிராமப்புறங்களில், வீட்டுக்கு வீடு காணப்படும் பப்பாளி மரங்களில்

கிடைக்கும் பழங்கள் தற்போது பழக்கடைகளிலும், தெருக்களில் வண்டிகளிலும் விற்பனை செய்வது அதிகரித்து வருகிறது. இங்கு, கிலோ, 20 ரூபாய்க்கு விற்கப்படுவதை பார்க்க முடிகிறது.

நகர் பகுதி கடைகளில், ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, சாத்துக்குடி, வாழைப்பழம் போன்ற பழங்களுடன் சேர்த்து பப்பாளி பழமும் விற்பனை செய்யப்படுகிறது. கர்நாடகாவில் இருந்து வாங்கி வந்து காஞ்சிபுரத்தில், 1 கிலோ, 20 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

கர்நாடகாவிலிருந்து, டன் கணக்கில் வாங்கி வந்து, பல்வேறு இடங்களில் விற்பனை செய்து வருகிறேன். தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளுக்கும் செல்வோம். மொத்தமாக கேட்டாலும் கொடுத்து விடுவோம். 3 கிலோ வாங்கினால், 50 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்.

கே.சலீம், கர்நாடகா

## விதை பரிசோதனை செய்ய வேளாண் துறை வேண்டுகோள் தோட்டக்கலை பயிர் விதைப்பில் விவசாயிகள்

செய்யூர்: பயறு வகைகளை பயிரிடும் விவசாயிகள், விதைகளை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என, வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சித்தாமூர் வேளாண் துறை உதவி இயக்குனர் முரளிதரன் கூறியதாவது:

சம்பா பட்டத்தில், நெல் பயிரிட காத்திருந்த விவசாயிகள், செய்யூர் தாலுகாவில் போதிய மழை பெய்யாததால், தோட்டக்கலை பயிர் செய்ய துவங்கி உள்ளனர்.

பெரும்பாலான விவசாயிகள் நிலக்கடலை விதைகளை, தனியார் விதை வியாபாரிகளிடம் வாங்குகின்றனர். இவர்களிடம் வாங்கும் விதைகள், 50 சதவீதம் முளைப்பு தன்மை இல்லாததால், சென்ற ஆண்டு வேர்க்கடலை விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

தற்போது, அதிக லாபம் தரும் பயறு வகையான நிலக்கடலை, உளுந்து போன்றவற்றை சாகுபடி செய்து வரும் நிலையில், வேர்க்கடலை சாகுபடியில், தரமான விதை இருக்க வேண்டும்.

விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் வாங்கினாலோ அல்லது தங்களிடம் உள்ள மணிலா விதையில், 1 கிலோ அளவிற்கு எடுத்து மாதிரிக்கு அனுப்பி, விதை பரிசோதனை செய்ய வேண்டும். இதனால், விதை முளைப்பு திறன் கொண்டதா என, அறிய முடியும். எனவே, பகுதி விவசாயிகள் விதை பரிசோதனை, செய்ய வேண்டும் என, அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு முரளிதரன் கூறினார்.

## ஏரி நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி

உள்ளாவூர்: உள்ளாவூர் ஏரி நிரம்பி இருப்பதால், ஒரு போகம் நெல் பயிரிடு

வதற்கு தேவையான தண்ணீர் இருப்பு உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

வாலாஜாபாத் அடுத்த உள்ளாவூர் கிராமத்தில், பொதுப்பணி துறைக்கு சொந்தமான ஏரிகள் உள்ளன.

இவ்விரு ஏரிகள் நிரம்பினால், உள்ளாவூரைச் சுற்றியுள்ள பகுதிகளில், இரண்டு போகம் நெல் விளையும். 'வர்தா புயல்' தயவால், உள்ளாவூர் ஏரியில், 75 சதவீதம் தண்ணீர் நிரம்பி உள்ளது.

இந்த தண்ணீரை பயன்படுத்தி, உள்ளாவூர் கிராமத்தைச் சுற்றியுள்ள விவசாயிகள், ஒரு போகம் நெல் பயிரிடலாம் என, மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். எனினும், பிரதான மதகு பகுதியை சீரமைக்க வேண்டும் என, எதிர்பார்க்கின்றனர்.

மழை வந்தால் தப்பும்!

உள்ளாவூர் ஏரி நிரம்பியிருப்பதால், விவசாயிகள், ஒரு போகம் நெல் பயிரிடலாம். கடை மடை விவசாயிகளுக்கு தண்ணீர் தட்டுப்பாடு இருக்கும். எனினும், மற்றொரு மழை பெய்தால், பெரும்பாலான ஏரி பாசன விவசாயிகள் தடையின்றி அறுவடை செய்து முடிக்க முடியும்.

-ஏரி பாசன விவசாயிகள், உள்ளாவூர்

### கால்நடைகளின் மேய்ச்சலுக்கும் பயன்படாத நெற்பயிர்கள்

பொன்னேரி: பழவேற்காடு ஏரி வழியாக வெளியேறிய கடல்நீர், அருகில் இருந்த நெற்பயிர்களை மூழ்கடித்து வீணாக்கியதால், தற்போது அவை கால்நடைகளின் மேய்ச்சலுக்கு கூட பயன்படுத்த முடியாமல் காய்ந்து கிடக்கிறது.

பொன்னேரி அடுத்த, போலாச்சியம்மன்குளம், கணவன்துறை, ஆண்டார்மடம் உள்ளிட்ட கிராமங்களில் சம்பா பருவத்திற்கு, நெல் பயிரிடப்பட்டு இருந்தது. கடந்த மாதம், 12ம் தேதி, 'வர்தா' புயலால் வங்கக்கடலில் சீற்றம்

அதிகரித்து, அதிகப்படியான கடல்நீர் முகத்துவாரம் வழியாக பழவேற்காடு ஏரி வந்தது.

இதனால், பழவேற்காடு ஏரியை ஒட்டியிருந்த மேற்கண்ட கிராமங்களில் கடல் நீர் புகுந்து, நெற்பயிர்களை மூழ்கடித்து சென்றது. அடுத்த இரு தினங்களில், விளைநிலங்களில் இருந்த கடல்நீர் வற்றியதுடன், நெற்பயிர்கள் உப்புநீரால் கருகி போயின.

மழையை மட்டுமே நம்பி விவசாயம் செய்யும் இந்த கிராமங்கள், இந்த ஆண்டு மழையில்லாமல் குளம் குட்டைகளில் இருந்த நீரை பாய்ச்சி நெற்பயிர்களை பாதுகாத்து வந்தனர். தற்போது, கடல்நீருக்கு தங்களது பயிர்களை தாரை வார்த்து உள்ளனர்.

நெல் பயிரிடப்பட்ட விளை நிலங்கள் தற்போது காய்ந்து போனதுடன், அதில் துர்நாற்றமும் வீசுகிறது. அவற்றை கால்நடைகளின் மேய்ச்சலுக்கு கூட பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

இது குறித்து, கிராமவாசிகள் கூறுகையில், 'மழை இல்லாமல் நெற்பயிர்கள் கருகும்போது, அவை கால்நடைகளின் தீவனத்திற்காவது பயன்படும். இந்த ஆண்டு அதற்கும் வாய்ப்பில்லாமல் போனது' என, விரக்தியுடன் தெரிவித்தனர்.

### கரும்பு பயிரில் ஊடுபயிராக வெங்காய சாகுபடியில் ஆர்வம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு பயிரில், ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் உள்ளன. இதனால் ஆண்டுதோறும் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அதிக லாபம் தரக்கூடிய செம்மை கரும்பு சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். செம்மை கரும்பு சாகுபடி முறையில், அதிக இடைவெளி விட்டு பயிர் செய்யப்படுவதால், அவ்விடத்தில் குறுகிய கால பயிரினை ஊடுபயிர் செய்கின்றனர்.

ஓராண்டு பயிரான கரும்பில் குறுகிய கால பயிர்களான உளுந்து, கீரை வகைகள் மற்றும் சிறு வெங்காயம் ஆகியவற்றை ஊடுபயிராக சாகுபடி செய்கின்றனர்.

கள்ளக்குறிச்சி அடுத்த சிறுவங்கூர், க.அலம்பளம், ரங்கநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில், கரும்பு பயிரில் ஊடுபயிராக பல்வேறு வகையான குறுகிய கால பயிரினை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

## மழையின்றி வாடிய மக்காச்சோளம்

சிவகாசி, சிவகாசி அருகே ஊராம்பட்டியில் மழையின்றி மக்காச்சோளம் வாடி கருகி வருகிறது.
சிவகாசி சுற்று கிராமங்களில் மக்காச்சோளம் சாகுபடி அதிகம். மாரனேரி, விளாம்பட்டி, ஊராம்பட்டி, எம். துரைச்சாமிபுரம், நதிக்குடி வரை 100 ஏக்கர் மேல் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் மக்காச்சோள விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆள் உயரத்திற்கு வளர வேண்டிய பயிர் முக்கால் அளவு கூட முளைக்கவில்லை. கதிரும் விளைச்சல் இல்லாமல் சுருங்கி போனது. வெயில் தாக்கமும் அதிகம் இருப்பதால் பயிர் வாடி கருகுகின்றன. மக்காச்சோளத்தை நம்பி பயிர் செய்த விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
ஊராம்பட்டி விவசாயி ராஜேஸ்வரி,“5 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளேன். கடந்தாண்டு நவம்பர் இறுதியில் விதைகள் தூவினோம். மூன்று மாதத்தில் விளைச்சல் தரவேண்டியது
பருவ மழை பொய்த்ததால் கதிர் முழுஅளவில் வளர்ச்சி பெறவில்லை. ரூ. 2 லட்சம் வரை முதலீடு செய்து பயிரிட்டுள்ளேன். அனைத்தும் வீணாகி போனது. அரசு இழப்பீடு வழங் கினால் மட்டுமே அடுத்தகட்ட விவசாயம் செய்ய முடியும்,” என்றார்.--

## வேடசந்தூர் பகுதிகளில், போதிய மழை பெய்யாததால் கருகி வரும் மானாவாரி பயிர்கள்



வேடசந்தூர்,

வேடசந்தூர் பகுதிகளில் போதிய மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>மானாவாரி பயிர்கள்</u>

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர், மாரம்பாடி, நாகையகோட்டை, அய்யாக்கவுண்டன்புதூர், எரியோடு, கல்வார்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம், நிலக்கடலை உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

ஆனால் கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்றது. எனினும் மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் கல்வார்பட்டி, அழகாபுரி, அய்யாக்கவுண்டன்புதூர் பகுதிகளில் விவசாயிகள் நிலக்கடலை, பருத்தி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர்.

<u>நிவாரணம் வழங்க நடவடிக்கை</u>

ஆனால் எதிர்பார்த்த படி மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன. நிலக்கடலை, பருத்தி செடிகள் கருகி நிற்பதை பார்த்து விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இதனால் விவசாயத்தை நம்பியிருந்த விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் மாற்றுத் தொழிலை தேடி ஊரை காலி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, 'வேடசந்தூர் பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன. மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் கடன் வாங்கி பயிர்களை சாகுபடி செய்தோம். ஆனால் பயிர்கள் கருகி வருவது வேதனையாக இருக்கிறது. இதனால் விவசாயத்தை கைவிட்டு மாற்றுத்தொழிலை தேடி செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.